விடுநர்,

முனைவர்.சு.பாலசுப்பிரமணியன்,

முதல்வர்

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்

பயிற்சி நிறுவனம்,

இராணிப்பேட்டை. 632 401

பெறுநர்,

முதன்மை கல்வி அலுவலர்கள்,

முதன்மை கல்வி அலுவலகம்

இராணிப்பேட்டை , வேலூர், திருப்பத்தூர்.

ந.க.எண். 219/அ2/2025, நாள். 21.04.2025.

மதிப்பிற்குரிய ஐயா /அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள் :- | ஆசிரியர் கல்வி – இராணிப்பேட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் – பள்ளிக்கல்வி 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்குப் பாடநூல் தயாரிப்பு பணிக்காக பாடவாரியாக வல்லுநர்கள் விவரம் கோருதல் - சார்பு. |
| பார்வை :- | சென்னை – 06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.604/ஈ2/2017, நாள்.16.04.2025. |

பார்வையில் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி, பள்ளிக் கல்விக்கான 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கு பாட புத்தகம் எழுதிய அனுபவம் உள்ள ஆசிரியர்கள் அல்லது பாடப்புத்தகம் எழுதுவதில் ஆர்வம் உள்ள ஆசிரியர்கள் அல்லது குறைந்தபட்சம் கட்டகங்கள் எழுதிய அனுபவம் உள்ள ஆசிரியர்களின் பெயர் பட்டியலை ஒவ்வொரு நிலைவாரியாக சேகரித்து தொகுத்து அனுப்ப வேண்டும் என, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

எனவே, தங்கள் மாவட்டத்தைச் சார்ந்த ஆசிரியர்களில் ஒரு பாடத்திற்கு ஓர் ஆசிரியர் வீதம் அதாவது தமிழ், ஆங்கிலம், கணிதம் ,அறிவியல் மற்றும் சமூக அறிவியல் என ஒவ்வொரு பாடத்திற்கும் ஓர் ஆசிரியர் என இடைநிலை ஆசிரியர்கள் 5 பேர் , பட்டதாரி ஆசிரியர்கள் 5 பேர் பாடவாரியாக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு முதுகலை பட்டதாரி ஆசிரியர்களின் விவரங்களை Google Form – ல் பதிவு செய்ய விருப்பமுள்ள ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதல்வர்

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,

இராணிப்பேட்டை.

முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்
பயிற்சி நிறுவனம்
இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்-632 401

நகல்

1. மாவட்ட கல்வி அலுவலர்கள்( தொடக்க நிலை மற்றும் இடைநிலைக் கல்வி ) இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் அவர்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. உதவி திட்ட அலுவலர்கள் (இராணிப்பேட்டை, வேலூர்,, திருப்பத்தூர்) அவர்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக கனிவுடன் அனுப்பலாகிறது.